# ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி

[ தன்னாட்சி ]

REACCREDITED WITH 'A' GRADE BY NAAC

பேர்லேண்ட்ஸ், சேலம் – 16.



## ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி விடுதி

விதிமுறைகள்

2020 – 2021

# ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி விடுதி

## கல்லூரி விடுதி வாழ்க்கையின் நோக்கங்கள்

எளிய வாழ்வும், உயர்ந்த எண்ணமும் கொண்ட வாழ்வை உருவாக்குவதும், உழைப்பின் உயர்வுக்கு சிறப்பு அளித்தலும் முறையான வாழ்க்கைப் பயிற்சி அளிப்பது விடுதியின் முக்கிய குறிக்கோளாகும்.

### விதிமுறைகள்

1 மாணவிகள் சம்பந்தமான விஷயங்களில் கல்லூரிக் கமிட்டியின் முடிவே இறுதியானதாகும்.

2 கல்லூரி இயக்குநர் அவர்களும், கல்லூரி செயலர் அவர்களும் விடுதிக்குப் பிரதம பாதுகாப்பாளர்களாகவும், கல்லூரி முதல்வர் அவர்கள் வார்டனும் ஆவார்கள்.

3 மாணவிகளை கண்காணிக்கும் நேரிடைப் பொறுப்பு, கண்காணிப்பாளர்களுடையதாகும்.

4 அவ்வப்பொழுது மாணவிகளுக்கு அறிவிக்கும் செய்திகள், பழக்கவழக்கங்கள் இவற்றை கண்காணிப்பாளர்கள் நேரிடையாக மாணவிகளிடம் தெரிவிப்பார்கள்.

5 மாணவிகள் கண்காணிப்பாளர்கள் கூறுவதை தவறாமல் பின்பற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள்.

6 ஆண்டு தோறும் விடுதியில் மாணவியர் சேர்ந்ததும் அவர்களுக்கு வரிசை எண் தரப்படும். பெற்றோர்கள் எழுதும் கடிதங்களின் முகவரியில் பெயருடன் எண்ணையும் சேர்த்து எழுத வேண்டும்

7 மாணவிக்குப் பெற்றோர் அனுப்பும் தொகையை மாணவியின் பெயருக்கு அனுப்பாமல், "வார்டன், ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி விடுதி, சேலம் – 16" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மாணவிகளின் பெயருக்கு அனுப்பப்படும் மணியார்டர்கள் திருப்பி அனுப்பப்படும். எக்காரணத்தைக் கொண்டும் மாணவிகள் பெயருக்குத் தொகை அனுப்புதல் கூடாது. மணியார்டர் கூப்பனில் மாணவியின் பெயர், எண், வகுப்பு முதலியவற்றை எழுதி அனுப்புதல் வேண்டும். ஆனால் செக் மூலம் வரும் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8 மாணவிகட்கு எக்காரணம் கொண்டும் கொடுக்கப்பட்ட அறையை மாற்றிக் கொடுக்கப்படமாட்டாது. மாணவிகள் அவரவர்க்கு ஒதுக்கப்பட்டுள்ள அறையில் தான் உறங்க வேண்டும். மற்ற மாணவிகள் அறையில் சென்று கண்டிப்பாக உறங்கக் கூடாது மற்றவர்கள் அறைக்குச் சென்று பேசிக் கொண்டு இருக்கக் கூடாது. அவ்வாறு வேறு மாணவிகளின் அறைக்கு மாணவி சென்று பேசிக் கொண்டிருந்தாலோ,



வேறு அறையில் சென்று உறங்கினால் விடுதியிலிருந்து நீக்கம் செய்தல் போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

9 கல்லூரி நாட்களில் விடுமுறை எடுக்க விரும்பும் மாணவியர்கள் முன்கூட்டியே தங்கள் வகுப்பு ஆசிரியையிடம் கையொப்பம் பெற்ற பின்பே, முதல்வரிடம் அனுமதி கோர வேண்டும்.

10 மாணவிகளை கல்லூரி ஹாஸ்டலிற்கு கொண்டு வந்து விடுவதற்கும், ஹாஸ்டலில் வந்து மாணவிகளை பார்ப்பதற்கும், விடுமுறைக்கு மாணவிகளை வீட்டிற்கு அழைத்து செல்வதற்கும் பெற்றோர்களுக்கு மட்டும் தான் அனுமதி உண்டு. இவ்விதிகளை மீறி நடப்பார்களேயானால் அவர்களை விடுதியிலிருந்து நீக்க நேரிடலாம் என்று அறிவிக்கலாகிறது.

11 திருமணமான பெண்களை விடுதியில் சேர்த்துக் கொள்வதில்லை.

12 ராகிங் செய்வது சட்டப்படி குற்றமாகும். விடுதியில் தங்கியிருக்கும் போது ராகிங் – ல் ஈடுபட்டாலோ அல்லது முன்னர் படித்த கல்வி நிறுவனத்தில் ராகிங் குற்றத்தில் ஈடுபட்டிருந்ததாக தெரிய–வந்தாலோ கல்லூரியிலிருந்தும் விடுதியிலிருந்தும் வெளி–யேற்றப்படுவார்கள்.

### கட்டண விவரம்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1 | நுழைவுக் கட்டணம் ( Per year ) | 200 - 00 |
| | பொறுப்புத் தொகை ( Refundable ) | 3000 - 00 |
| | பராமரிப்புச் செலவு ( Per Semester ) | 1500 - 00 |
| | விடுதி அபிவிருத்திக் கட்டணம் ( Per year ) | 1000 - 00 |
| | மூன்று மாத உணவுக்கட்டணம் (முன்பணம்) | 9000 - 00 |
| | | 14,700 - 00 |

(பொறுப்புத் தொகை அந்த, அந்த ஆண்டு இறுதியில் நேர் செய்யப்படும்.)

2 பொறுப்புத் தொகையை விடுதியிலிருந்து மாணவியைப் படிப்பு முடித்து அழைத்துச் செல்லும் போது திருப்பித்தரப்படும். வருட இடையில் எக்காரணம் கொண்டும் விடுதியை விட்டுச் செல்லும் மாணவிகட்கு பொறுப்புத்தொகை தவிர மற்ற எந்தக் கட்டணமும் திருப்பித்தரப்பட மாட்டாது. பராமரிப்புச் செலவு ஆண்டிற்கு இரண்டு தவணைகளாக வசூலிக்கப்படும் ( முதல் தவணை ஜூன் மாதம் முதல் அக்டோபர் முடிய) (இரண்டாம் தவணை நவம்பர் மாதம் முதல் மார்ச் முடிய)

மூன்று மாதம் உணவுக்கட்டணம் முன்பாகவே செலுத்த வேண்டும் ரூ. 9000 / – இந்த தொகை இந்த ஆண்டு இறுதியில் 3 மாதம் உணவுக் கட்டணத்தில் நேர்செய்யப்படும்.

3 மாணவிகள் எந்த பருவத்தில் வந்து விடுதியில் சேர்ந்தாலும் மேற்கண்டவாறு கட்டணம் செலுத்த வேண்டும்.

4 விடுதி உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 3000 க்கு மேல் செலவாகலாம் பங்கீட்டு முறையில் ( Dividing System )

உணவுக் கட்டணம் கணக்கிட்டு பட்டியல் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும்.

5 ஒரு மாதத்திற்குரிய செலவுப் பட்டியல் அடுத்த மாதம் 10-ம் தேதிக்குள் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும். அத்தொகையை 30-ம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும். அப்படி செலுத்தத் தவறியவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூபாய்க்கு 5 பைசா வீதம் கூடுதல் தொகை செலுத்துதல் வேண்டும். மாதம் தவறாமல் உணவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அப்படி செலுத்த தவறியவர்கள் விடுதியில் தங்குவதற்கு அனுமதியில்லை.

6 விடுதி அலுவலகத்தில் ஞாயிறு, அரசாங்க விடுமுறை முதலிய விடுமுறை நாட்களில் விடுதிக் கட்டணம் வசூலிக்கப்படுவதால் மாதக்கட்டணம் 30-ம் தேதிக்கு மேல் செலுத்துபவர்கள் கூடுதல் தொகையை செலுத்துதல் வேண்டும்.

7 கல்லூரி 10 நாட்களுக்கு மேல் விடுமுறை விட்டால் மட்டும் உணவுக் கட்டணம் குறைக்கப்படும். கல்லூரியின் கடைசி வேலை நாள் வரை, ஹாஸ்டல் மாணவிகள், கல்லூரிக்கு செல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

8 மாணவிகள், பருவத் தேர்வு நாட்களில் விடுதியில் தங்கி இருந்து தான் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள். அவர்களது பருவத் தேர்வு முடிந்த பிறகே வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

9 கல்லூரி விடுதியில் Laptop, Online Class மற்றும் படிப்பு சம்பந்தமான உபயோகத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. வேறு விஷயங்களுக்காக உபயோகிப்பது தெரியவந்தால் Laptop பறிமுதல் செய்யப்படும்.

## தினசரி வாழ்க்கை முறை

| | | |
|---|---|---|
| | | காலை |
| துயில் எழுதல் | மணி | 5-00 —— |
| குளித்தல் | | 6-00-7-30 |
| ஐக்கிய வணக்கம் | | 7-45-8-00 |
| காலை உணவு | | 8-00 —— |
| கல்லூரி இறை வணக்கம் | | 9-15 —— |
| பாட வகுப்புகள் | | 10-00-1-00 |
| | | மதியம் |
| பகல் உணவு | | 1-00-1-55 |
| | | மாலை |
| பாட வகுப்புகள் | | 2-00-4-00 |
| சிற்றுண்டி | | 5-00-5-30 |
| சொந்தப்பணி | | 5-30-6-30 |
| இறை வணக்கம் | | 6-45-7-15 |
| இரவு உணவு | | 7-30-8-00 |
| அமைதியாகப் படித்தல் | | 8-15-9-30 |
| நித்திரை | | 10-00 —— |

இரவு 8-00 மணி முதல் காலை 8-00 மணி வரை அமைதியை கடைப்பிடித்தல் இன்றியமையாதது.



## உடையும் உடைமைகளும்

1 ஒவ்வொரு மாணவியும் படுக்கை, எவர்சில்வர் தட்டு - 1, டிபன் பாக்ஸ் - 1, டம்ளர் - 1, சிறு தட்டு - 1, பிளாஸ்டிக் வாளி - 1, கோப்பை - 1, Trunk Box - 1, 3 செல் டார்ச் லைட் - 1 அவசியம் வைத்திருத்தல் வேண்டும். பிளாஸ்டிக் வாளி, கோப்பை முதலியவற்றை கல்லூரி விடுதியில் விலைக்கு வாங்கிக்-கொள்ளலாம்.

2 ஆடம்பரமான ஆடைகளும், விலையுயர்ந்த அணிகலன்களும் மொபைல் போன்களும், டிரான்ஸிஸ்டரும் விடுதியில் அனுமதிக்கப்படமாட்டாது. மாணவிகள் விடுதியில் மொபைல் போன் வைத்திருப்பது தெரியவந்தால் சம்மந்தப்பட்ட மாணவிகள் விடுதியிலிருந்து நீக்கப்படுவார்கள். மாணவியர் தங்களிடம் பெரும் தொகை வைத்திருக்கலாகாது. அவர்களது உடைமைகளை அவர்களே முழுப்பொறுப்புடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். காணாமற்போகும் பொருட்களுக்கு நிர்வாகிகள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள்.

## உடல்நலமின்மை

கல்லூரி விடுதி மாணவிகளின் வசதிக்காக மருத்துவமனை ஒன்று உள்ளது. இதில் ஒரு லேடி டாக்டர், பயிற்சி பெற்ற இரண்டு நர்ஸ்கள் பணியாற்றி வருகிறார்கள்.

## பார்வையாளர்கள்

1 மாணவியரை விடுதியில் சேர்க்கும் பொழுது பெற்றோர்கள் தான் உடன் வர வேண்டும்.

2 ஒவ்வொரு மாணவிக்கும் இரண்டு பார்வை சீட்டுகள் (Visiting Card) கொடுக்கப்படும். மாணவிகளை பார்க்க வரும் பெற்றோர்கள் கண்டிப்பாக அதனை கொண்டுவர வேண்டும். பெற்றோர்கள் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கீழ்க்கண்ட நேரங்களில் மாணவியரை பார்க்க அனுமதிக்கப்படுவர்.

காலை 9 மணி முதல் 12 மணி வரை
பகல் 2 ,, ,, 4 ,, ,,

3 பெற்றோர்கள், பார்வையாளர்கள் கூடத்தில் தான் மாணவியரை பார்க்க வேண்டும். பார்வையாளர்கள் அசைவ உணவு கொண்டு வரலாகாது. பெற்றோர்கள் வகுப்பு நேரங்களில் மாணவியரை பார்க்க முடியாது. பெற்றோர்கள் மாணவியை பார்க்க வரும் பொழுது மற்ற உறவினர்களை அழைத்து வர வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாணவியை பார்க்க வரும் பொழுது வாக்கு வாதம், முரட்டு தனமாக தாக்குதல் போன்ற செயல் கல்லூரி மற்றும் விடுதி வளாகத்தில் நடை பெறலாகாது.



4 மாணவியர் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் நேர்ந்தால் வார்டனின் அனுமதிப் பெற்று பெற்றோருடன் மட்டுமே செல்லுதல் வேண்டும். அனுமதியின்றி வெளியில் செல்லும் மாணவிகள் எக்காரணம் கொண்டும் ஹாஸ்டலில் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5 ஞாயிற்றுக் கிழமைகளில் மாணவியர் அவரவர்களின் அறையிலேயே இருக்க வேண்டும்.

## விடுமுறை

1 விடுமுறைக்குச் செல்லும் மாணவியர் குறித்த நாளில் வந்துசேர கடமைப்பட்டிருக்கிறார்கள். வரத்தவறினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து 7 நாட்கள் ஓர் அறிவிப்புமின்றி விடுதிக்கு வராமல் இருப்பின் மாணவியின் பெயர் விடுதி பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

2 விடுமுறைகளுக்கு **பெற்றோர்களுடன் மட்டும் தான்** மாணவிகள் அனுப்பப்படுவார்கள்.

3 மாணவிகள் விடுதி மற்றும் கல்லூரி வளாகத்திற்கு விடுமுறை முடிந்து வரும் பொழுதும், விடுமுறைக்கு வீட்டிற்கு செல்லும் பொழுதும் பாவாடை தாவணி அல்லது புடவை தான் அணிய வேண்டும் மாடர்ன் டிரஸ்கள் அணியலாகாது.

## சுத்தம்

1 மாணவியர் தங்கள் அறைகளையும் அவற்றின் சுற்றுப்புறங்-களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள்.

2 மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்படாத மாணவியர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பெற்றோரும் மாணவியரும் விடுதி விதிமுறைகளை கண்டிப்பாக அனுசரிக்கக் கடமை பட்டிருக்கிறார்கள். மாணவியர் யாவரும் விடுதி வாழ்வில் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்துவதையே தங்கள் கடமையாக கொண்டொழுக வேண்டும்.

Phone Nos. I Year - 0427 - 4550275
II Year - 0427 - 4550274
III Year & P.G. - 0427 - 4550271
B.Ed. - 0427 - 4550276

**Yatiswari Guhapriya Amba** — Secretary
**Yatiswari Vinayakapriya Amba** — Directress

**Dr. ( Tmt. ) R. Uma Rani,** M.C.A., M.Phil., Ph.D.,
Principal & Warden